பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரேலால்ஜீயால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

16 ] சென்னை—ஞாயிறு, ஜூலை 28, 1946. [ விலை. அணா. 2

## ஆமதாபாத்தில் நடக்கும் கொலை பாதகங்கள்

ஆமதாபாத்தில் ஆடு மாடுகளை வெட்டுவது போன்ற கசாப்புவேலை அநேக நாட்களாக மனிதர்களிடையே நடந்து வருகின்றது. யார் குற்றவாளி என்று சொல்வது கஷ்டமாயிருக்கிறது. யார் யாரைக் கொண்டு இந்தக் கொலைக் காரியங்களை நடத்துகிறார்கள் என்ற விஷயத்தை ஜனங்கள் அறிய வொட்டாமல் தடுப்பதே சர்க்காரின் கொள்கை. அந்தக் கொள்கையையே காங்கிரஸ் மந்திரிசபையும் கடைப்பிடித்து வருகின்றது. அதைக்கொண்டு, இப்படி விஷயத்தை மறைத்து வைப்பதற்குச் சரியான காரணம் இருக்கும் என்று நம்பவேண்டியதா யிருக்கிறது. ஆயினும் திருடனுடைய தாய் மகனுடைய திருட்டுக்காக வருந்துவதாகப் பாசாங்கு செய்வாளே அதுபோலவே இருந்தாலும் இருக்கலாம். ஆமதாபாத்தில் உள்ளவர் அனைவர்க்கும் அக்கிரமம் செய்ய ஆரம்பிக்க குற்றவாளி யார் என்னும் விஷயம் தெரியாமலிராது. என்னுடைய வேலை அதைக் கண்டுபிடிப்பதன்று, அதைவிட எளிதான ஒரு காரியமே யாகும்.

பரஸ்பரம் கொலை செய்துகொண்டிருக்கும் கட்சியாரில் ஒரு கட்சியார் உடனே அந்தமாதிரிக் காரியங்கள் செய்வதை நிறுத்தி விடுவதுதான் பொன் போன்ற உத்தம வழியாகும். அப்பொழுதுதான் இந்தக் கொலைவெறி ஒழிந்து உண்மையான சமாதானம் உண்டாகும். என்னுடைய சிறு பிராயத்தில் நானும் என் சிற்றப்பா மகனும் கஞ்சாவைக் குடித்துவிட்டு பைத்தியக்காரர்கள் மாதிரி ஒருவரை ஒருவர் கேலி செய்துகொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தோம். ஆனால் மறுநாட் காலையில் அந்த வெறி நீங்கியபோது ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்க முடியாத அளவு நாணம் அடைந்தோம். அந்தக் காரியத்தை ஆமதாபாத்தில் நடக்கும் காரியத்தோடு ஒப்பிட்டால் அது அற்பமான தீங்கு உடையதாகவே தோன்றும். ஆமதாபாத் விஷயமோ பயங்கரமாக இருந்து வருகின்றது.

இந்த அக்கிரமங்களைத் தடுக்கும் முயற்சியில் மூன்று இளைஞர்கள் பலியானது போதாதா? அதைப்பற்றி நான் புனாவில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசினேன். அந்த மூன்று பிராணத் தியாகிகளையும் பற்றி அநேக நண்பர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நமக்கு மட்டும் அறிவு இருக்குமானால் இந்தப் பலியே போதும். இதற்குள் அக்கிரமத்தீ அணைந்து போயிருக்கும். ஆயினும் அணையாததைக் கொண்டு அவர்களுடைய தியாகத்தால் எவ்வித பலனும் உண்டாகவில்லை என்று எண்ண வேண்டாம். அத்தகைய தீயை அணைக்க இதைவிட அதிகமான தியாகம் அவசியம் என்பதையே அது காட்டுகின்றது.

இந்தத் தியாகத்தைச் செய்யாமல் தீயை அணைப்பதற்குரிய வேறு வழி இதுவாகும்:—இரண்டு கட்சியாரும் பரஸ்பரம் அக்கிரமங்கள் செய்து அலுத்துப் போகவேண்டும். போலீஸார் சுடவேண்டும். சிலர் சிறைக்கும் சிலர் தூக்குமேடைக்கும் அனுப்பப்பட வேண்டும். அப்பொழுதுதான் சமாதான நிலைமை உண்டாகும்.

ஆனால் அது சரியான வழியன்று. இந்தமாதிரியாக அணைத்தால் அது மறுபடியும் முன்னிலும் அதிக வேகத்துடன் எரியவே ஆரம்பிக்கும். இந்த முறை விஷத்தைப் போக்காது. வெளியே தெரியாதபடி மறைத்துவைக்க மட்டுமே செய்யும். அப்படிச் செய்வதால் விஷமானது உடல் முழுவதும் பரவி முன்னிலும் அதிகமாகத் தீமையைச் செய்யும்.

போலீஸையும் அதன் அண்ணனான இராணுவத்தையும் துணையாகக் கொண்டு ஏற்படுத்தும் சமாதான நிலைமை அன்னிய அரசாங்கத்தின் பிடியை முன்னிலும் அதிகமாகப் பலப்படுத்தும். நம்மை முன்னிலும் அதிகமாகப் பலவீனப் படுத்திவிடும்.

கவிஞர் இக்பால் தம்முடைய இறவாத புகழுடைய பாடல் ஒன்றில்

“பரஸ்பரம் சண்டையிடப் போதிக்கும் மதம் மதமாகாது” என்று கூறுகின்றார்.

அத்துடன் நாம் கோழைகளாக நடந்து வருகிறோம் என்பதற்கு நாம் பரஸ்பரம் சண்டை யிடுகிறோமே அதைவிடச் சிறந்த நிரூபணம் வேறு தேவையோ?

பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்ளுதல் உட்பட எதையும் செய்யவேண்டுமானால் அதற்குரிய முறை ஒன்று பிரத்தியேகமாக உண்டு. நாம் சண்டையிட்டுக்கொள்ள வேண்டுமானால் எதற்காகப் போலீஸின் உதவியையும் இராணுவத்தின் உதவியையும் நாடவேண்டும்? இராணுவமானது இந்தியாவிலிருக்கும்வரை சுத்தமாக்குதல், தரிசான நிலங்களைச் சாகுபடி செய்தல் போன்ற வேலைகளுக்கு மட்டும்தான் உபயோகிக்கப்படும் என்று சர்க்கார் தெளிவாகக் கூறிவிடவேண்டும். போலீஸைத் திருடர்களைக்கண்டு பிடிப்பதற்காக மட்டுமே உபயோகிக்க வேண்டும். போலீஸையும் இராணுவத்தையும் வகுப்புவாதக் கலகங்களை அடக்குவதற்காக உபயோகிக்கக் கூடாது.

ஆமதாபாத் ஜனங்கள் போலீஸ் உதவியும் இராணுவ உதவியும் வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவு தைரிய முடையவர்களா யிருக்கவேண்டும்; கோழைகளாக இருக்கக்கூடாது. அங்கே போக்கிரிகள்தாம் மறைந்திருந்து அக்கிரமங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். கத்திக்குத்துக் காயங்கள் எல்லாம் முதுகிலேயே ஏற்பட்டிருக்கின்றன. மார்பில் ஏற்படவில்லை. அத்தகையோரைக் கண்டு என்

அஞ்சவேண்டும்? நம்முடைய தியாகம் அவர்களுடைய வெறியை நீக்கி அவர்களுக்குப் புத்தி புகட்டும் என்ற நம்பிக்கையுடன் அவர்களை எதிர்த்துப் பலியாவதே நல்லது. உயிரைத் துறப்பதற்கு வேண்டிய மனோதைரிய மில்லாதவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அக்கிரமிகளுடன் சண்டை போடலாம். ஆனால் நாம் அறியாதபடி பின்னாலிருந்து குத்தும்பொழுது என்ன செய்வது என்று கேட்கக்கூடும். அதைத் தடுக்க முடியாதுதான். ஆனால் பின்னால் வந்து குத்துவதைப் பார்ப்பவர்கள் தைரியமாக அவர்களைப் பிடித்துப் போலீஸாரிடமோ அல்லது அவர்களுடைய இனத்தாரிடமோ ஒப்புவிக்கலாம். அல்லது அவர்களை ஜனங்களுடைய பஞ்சாயத்து சபையிடம் கொண்டுவந்து நிறுத்தவும் செய்யலாம். இப்படி எல்லாம் செய்யாமல் தாங்களே அவர்களைத் தண்டிக்க ஆரம்பித்துவிடமட்டும் செய்யலாகாது.

பாஞ்சகனி, — 22-7-46 — மோ. க. காந்தி.

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## வாரக் கடிதம்

நாங்கள் பாஞ்சகனிக்கு வந்து சேர்ந்தபொழுது சீதோஷ்ண ஸ்திதி வெகு மனோகரமா யிருந்தது. சூரியனையும் காணோம் மேகத்தையும் காணோம். காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. சுற்றியிருந்த மலைச் சிகரங்களின்மீது மௌனம் உறங்கிக் கொண்டிருந்தது. பள்ளத்தாக்குகளில் பரந்து கிடந்த வயல்களும் கிராமங்களும் பசுமையும மஞ்சளும் கொண்டு பூவேலைகள் செய்த சிறந்த பட்டுக் கம்பளம்போல் பிரகாசித்துக்கொண்டு வெளியே வந்து பாருங்கள் என்று மோகவலை வீசிக்கொண்டிருந்தன.

ஆனால் காந்தியடிகளோ இந்த அழகான காட்சிகளை நுகராமல் இன்னும் இந்த நெல்வயல்களுக்கு வேண்டிய மழை பெய்யவில்லையே என்ற சிந்தனையில் ஆழ்ந்து போனார். அவருடைய பிரார்த்தனைக்கு இரங்கி ஆண்டவன் அருள் செய்ததுபோல் அது முதல் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. வாடைக் காற்று எலும்பையுங்கூடத் துளைத்துவிடும்போ லிருக்கிறது. அதனால் நாங்கள் வீட்டினுள்ளேயே அடைப்பட்டுக் கிடக்கின்றோம். ஆனால் காந்தியடிகளோ ஏழை விவசாயிகளுக்கு வேண்டிய தான்யம் கிடைத்துவிடும் என்று எண்ணி எண்ணி சந்தோஷப் பட்டுக்கொண் டிருப்பதால் இந்த சீதோஷ்ண ஸ்திதி அவர்க்கு உகந்ததாகவே தோன்றுகின்றது.

தினந்தோறும் வரும் கடிதங்களைப் பார்ப்பது எங்களுக்குக் கஷ்டமாயிருக்கும். அந்தக் கஷ்டம் தபால் சிப்பந்திகள் வேலை நிறுத்தத்தின் காரணமாகச் சென்ற வாரம் எங்கட்குக் குறைந்திருந்தது. நாங்கள் அதைச் சந்தோஷமாக வரவேற்றோம். ஆயினும் இந்த வாரத்தில் காந்தியடிகளைப் பார்க்க வருவோர் இடைவிடாமல் வந்துகொண் டிருந்தார்கள். அமரிக்கப் பத்திரிகை நிருபர் லூயி பிஷரும் திரு ஜெயப் பிரகாஷ் நாராயணனும் அவருடைய பரிவாரத்தாரும், அவுந்த் சமஸ்தானதிபதியும், சங்கர ராவ் தேவும் வந்திருந்தார்கள். இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் 'எங்களுக்கும் கொஞ்சம் இடங்கொடுத்துப் பாருங்களேன்' என்று காந்தியடிகளிடம் வேண்டிக் கொள்வதற்காக வந்திருந்தார். தென் ஆப்பிரிக்காவில் நடப்பது போன்ற அக்கிரமம் நடக்கப் போவதாகத் தோன்றும் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு தூது கோஷ்டியார் வந்திருந்தார்கள். இந்த விஷயங்களைப்பற்றி அடுத்த வாரம் எழுதுகின்றேன்.

மாலை நேரங்களில் நடத்தும் பிரார்த்தனைக் கூட்டங்கள் முன் போலவே பார்ஸிப் பெண் பாடசாலையிலேயே நடந்து வருகின்றன. அந்தப் பாடசாலை மாணவிகள் பிரார்த்தனையின் ஆரம்பத்தில் ஜெண்ட் அவஸ்தா என்னும் பார்ஸி வேத நூலிலிருந்து ஒரு பாடலைப் பாடுகிறார்கள். அதன்பின் குஜராத்திப் பாடல் ஒன்று பாடப்படுகிறது. இவைகளை ஆதாரமாக வைத்து காந்தியடிகள் தம்முடைய பிராத்தனைப் பிரசங்கங்களை நிகழ்த்துகிறார். சில வேளைகளில் அவருடைய பிரசங்கத்துக்கு அன்னிய நாட்டு சமாச்சாரமாவது இந்திய சமாச்சாரமாவது ஆதாரமாக அமைகின்றது. சில வேளைகளில் அவற்றைக் கொண்டு தாம் பேசும் விஷயங்களை விளக்கிக் கூறுகிறார்.

காந்தியடிகள் செய்த பிரசங்கங்களிலிருந்து சில சாரமான பாகங்களை இங்கு தருகின்றேன்.

"இன்று பாடப் பெற்ற பாடலில் பக்தர் வேண்டுகிறார்:—

'என்னுடைய இதயத்தைத் தூய்மையாய் இருக்கச் செய்யும், உண்மையைக் கடைப்பிடித்து நடக்கும்படிச் செய்யும். உண்மையை கடைப்பிடித்து நடப்பதால் உண்டாகும் உண்மையான இன்பத்தைக் கொடுத்தருளும் உண்மையைக் கைவிடுவதால் விளையும் துக்கத்தை உண்டாகாமல் செய்யும்.'

நான் அறுபது வருஷ அனுபவத்தின் பலனைக் கூறுவதை நம்புங்கள். மனிதனுக்கு ஏற்படக் கூடிய துர் அதிர்ஷ்டம் உண்மை நெறியை விட்டு விலகுவது ஒன்றேயாகும். இதை மட்டும் நீங்கள் உணர்ந்து கொண்டால் உண்மையாக ஒழுகுவதின் காரணமாக ஏற்படக்கூடிய துன்பங்களும் கஷ்டங்களும் எவ்வளவு அமோகமாக உண்டான போதிலும் கொஞ்சமும் அஞ்சாமல் உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய சக்தியை அருளும்படியே நீங்கள் எப்பொழுதும் இறைவனிடம் பிராத்தித்துக் கொள்ள வேண்டும்."

மற்றொரு சாரமான பாகம் இது:—

"இப்பொழுது ஜெண்ட் அவஸ்தாவிலிருந்து பாடப் பெற்றப் பாடல் ஐந்துவித வைத்தியர்களைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் ஐந்தாவதாகக் கூறப்பட்ட வைத்தியரே உண்மையான வைத்தியர். அவர் நோயைக் குணப்படுத்துவதற்கு இறைவனுடைய நாமத்தைத் தவிர வேறு எதையும் கையாளுவதில்லை. இதைத்தான் இயற்கை வைத்தியம் சம்பந்தமாக நான் கூறி வருகின்றேன். ராமநாமந்தான் சஞ்சீவி மருந்து. என் கூற்றுக்கு ஜெண்ட் அவஸ்தாவில் ஆதாரம் இருப்பதைக் காண எனக்கு சந்தோஷமாகவும் ஆச்சரியமாகவுமிருக்கிறது"

காந்தியடிகள் மற்றொரு நாள் கூறியதாவது:—

"இப்பொழுது பாடப் பெற்ற பாடலில் கடவுள் கண்ணுக்குத் தெரியாமலிருந்த போதிலும் சர்வ வியாபகயாக இருப்பதாகக் கவிஞர் கூறுகிறார். அது உண்மைதான். நம்முடைய எண்ணங்கள் நமக்குத் தெரிவதைவிட கடவுளுக்கே அதிகமாகத் தெரியும். கடவுள் ஒருவரையே நம்பி வாழ்பவன் எவ்வளவு பயங்கரமான கொடுங்கோல் மன்னனுக்கும் அவனுடைய உத்யோகஸ்தர்களுக்கும் அஞ்ச மாட்டான். அதற்குக்காரணம் எவருடைய கண்ணை ஒளித்து எதுவும் நடப்பதில்லையோ அந்த ஏக சக்ராதிபதியின் பாதுகாவலில் இருப்பதுதான்"

காந்தியடிகள் இருபதாம் தேதி செய்த உபன்னியாசத்தில் கூறியது:—

"இன்று பாடப்பெற்ற பார்ஸி வேதப்பாடல் கூறுகிறது:—

"கடவுளே நான் மனம், மொழி, மெய், மூன்றிலும் தூய்மையாயிருந்து என் இதயத்தைச் சுத்தம் செய்து அதில் உம்மை வீற்றிருக்கச் செய்வேன்."

இந்த மாதிரிச் செய்யாத வரையில் யாரும் கடவுளை அணுக முடியாது.

அதன் பிறகு கவிஞர் கூறுகிறார் :—

"கடவுளே, உம்மை வணங்குகின்றேன் எனக்குச் செய்த நன்மைக்காக வந்தனமளிக்கின்றேன். நான் எப்பொழுதும் உம்முடைய கடனாளியாக யிருப்பேன்."

கடவுளுக்குச் செலுத்தக்கூடிய இந்தக் கடன் யாது? அந்தக் கடனைச் செலுத்துவது எப்படி? பரிபூரணமாகக் கடைமையை நிறைவேற்றுவதன் மூலமாகவே அந்தக் கடனை நிறைவேற்ற முடியும். ஆனால் எந்த மனிதனும் கடைமையைப் பரிபூரணமாக நிறைவேற்ற முடியாதாகையால் அவன எப்பொழுதும் கடவுளுக்குக் கடனாளியாகவே யிருப்பான்."

காந்தியடிகள் மற்றொரு சமயம் கூறியதாவது :—

"மரத்துக்குப் பல கிளைகளிருந்த போதிலும் ஒரு வேர் தானுண்டு. அதுபோல் உலகத்தில் காணப்படும் மதங்களெல்லாம் ஒரே மரத்தில் காணப்படும் இலைகளும் கிளைகளுமேயாகும். இஸ்லாம், கிறிஸ்து மதம், இந்து மதம், பார்ஸி மதம் ஆகியவை முக்கியமான கிளைகள். ஆனால் மத வித்தியாசங்களோ மக்கள் எத்தனை பேராகக் காணப்படுகிறார்களோ அத்தனையாகக் காணப்படும். பிரார்த்தனைக் கூட்டத்தின் போது கடவுள் நாமத்தைப் பஜித்து விட்டுக் கூட்டததை விட்டு வெளியே சென்றதும மறந்து விட்டால அது பிரார்த்தனை யாகாது. தெய்வ நிந்தனையே யாகும். இடைவிடாமல் வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிப்பதே மதமாகும்."

"கடவுளே! எனக்கு உண்மையான அறிவைத் தந்தருளும். என் வாழ்நாள் முழுவதையும் உம்முடைய சிருஷ்டியின் க்ஷேமார்த்தமாகச்சேவைசெய்வதற்கு வேண்டிய சக்தியைக் கொடுத்தருளும்." என்று சிறுமிகள் கைகூப்பி நின்றுகொண்டு பாடியதைக் கேட்டார்கள்.

அது ஒரு சிறந்த பிரார்த்தனை. சேவை செய்வது கஷ்டமான காரியமாகத் தோன்றாமல் களிப்பான காரியமாகத் தோன்றுமாறு செய்யக் கூடிய அளவு சேவை செய்ய வேண்டும் என்ற ஆவலைத் தம்முடைய இதயத்தில் நிறைத்து விடும்படி கேட்கிறார் பக்தர். ஆனால் சேவை என்பதன் பொருள் யாது? யுத்த களத்தில் உடன்பிறந்த மனிதர்களைக் கொல்லுவதும் சேவைதானோ? இல்லை. அதனால்தான் பக்தர் 'எது செய்தாலும் என்னுடைய செயல்கள் தூய்மையாகவும் பெருந்தன்மையுடையனவாகவும் இருக்கும்படி செய்யும். அந்தச் செயல்களை உம்முடைய ஆநந்தத்தைத் தருமாறு செய்யும்.' என்று பிரார்த்திக்கின்றார். இந்த விதமான பிரார்த்தனையின்படி நடப்பவரே இறைவனுடைய ஆநந்தத்தை நுகர்வர்."

காந்தியடிகள் ஆமதாபாத் நகரத்தில் நடைபெறும் கலகங்களைக் குறித்துக் கூறியதாவது :—

"ஆமதாபாத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டுள்ள பைத்தியம் இன்னும் தீர்ந்தபாடில்லை. இஸ்லாம் என்பதன் பொருள் சமாதானமேயாகும். ஹிந்துக்கள் அஹிம்சா தர்ம நெறியைப் பின்பற்றுபவர்களாகக் கூறிக்கொள்கிறார்கள், இரு மதத்தாரும் கடவுளை பஜிக்கிறார்கள். ஆனால் உண்மையில் யாரைப் பின்பற்றி நடக்கிறார்கள் என்றால் சாத்தானைத்தான்.

முஸ்லிம், நிரபராதியான ஹிந்துவைக் குத்துகிறார். ஹிந்து, நிரபராதியான முஸ்லிமைக் குத்துகிறார். ஆமதாபாத்தில் சில தினங்களுக்குமுன் கொல்லப்பட்ட மூன்று தொண்டர்களில் ஒருவர் முஸ்லிம். அவரைக் குத்திக்கொன்றதும் முஸ்லிம் ஒருவருடைய கத்தியேயாகும். அவர் ஹரிஜனங்களுடன் சென்றார். அவரை முஸ்லிம் என்று யாருக்கும் தெரியாது. அவருடைய தோழர்களில் ஒருவரான வஸந்தராவ் என்பவர் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தெரிந்தவர். அவர்களுக்கு அவரிடம் மரியாதையும் உண்டு. அவர் சிறையிலிருந்த பொழுது அவருடைய முஸ்லிம் தோழர்களில் ஒருவர் உண்ணா விரதம் மேற்கொண்டார். சத்தியாக்கிரகம் செய்து சிறை சென்றவர்களில் மிகப் பெரும்பாலோர் ஹிந்துக்களாக இருந்தார்கள். வஸந்தராவ் உண்ணா விரதம் மேற்கொண்ட முஸ்லிம் சகோதரர்க்குத் தம்முடைய ஆத்மீக ஆதரவைத் தெரிவிப்பது கடன் என்று எண்ணி தாமும் அனுதாப உண்ணா விரதம் மேற்கொண்டார். அப்பொழுது சிறையிலிருந்த தோழர்களில் முதன்மையானவர்களா யிருந்தவர்கள் அவரை உண்ணா விரதம் இருக்க வேண்டாம் என்று தடுக்க முயன்றார்கள்.

"எங்கள் எல்லோரையும்விட நீர் அறிவில் மேம்பட்டவரோ? முஸ்லிம் நண்பர் உண்ணாவிரத மிருப்பதற்கு நியாயம் கிடையாது என்பதை அறிவீர். நியாயம் இருந்தால் நாங்கள் எல்லோரும் உண்ணா விரதம் இருக்க மாட்டோமோ?" என்று கூறினார்கள்.

அதற்கு அவர்—"நான் அறிவுள்ளவன் என்று கூறவில்லை. முட்டாளாக இருக்கவே விரும்புகிறேன். உங்கள் ஆசீர்வாதங்களை நாடுகின்றேன். இந்த முஸ்லிம் நண்பர் ஹிந்துக்களாகிய நம்மிடையே இறந்து விடுவாரானால் நான் வெளியேயுள்ளே முஸ்லிம் நண்பர்களுக்கு என்ன சொல்வேன்? ஆகையால் அவருடைய உண்ணாவிரதம் எண்ணிய பலனை அளித்தாலும் அளிக்கா விட்டாலும் அவருடன் சாகவே தீர்மானித்திருக்கிறேன்" என்று கூறினார்.

முஸ்லிம் நண்பரும் சாகவில்லை, வஸந்தராவும் சாகவில்லை. ஆனால் வஸந்தராவ் ஹிந்து—முஸ்லிம் இரண்டும் சேர்ந்த உண்மையான மனிதர் என்பதை நிரூபித்து விட்டார். இந்த விதமான மனப்பான்மையை நீங்களும் வளர்த்துக் கொள்ளுங்கள். ஆமதாபாத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இழந்து போன அறிவை மறுபடியும் அளிக்கும்படிக்குக் கடவுளைப் பிரார்த்தியுங்கள். உங்கள் பிரார்த்தனை வீண் போகாது. ஆமதாபாத்திலுள்ள அக்கிரமிகளுடைய இதயங்களை இளக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

பாஞ்சகனி. — 21-7-46 — பியாரேலால்.

---

தமிழ் ஹரிஜன் உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுவதே அதற்குச் சுலபமான வழி.

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா | தபால் செலவு உள்பட | ரூ. 7 | 0 0 |
| ஆறுமாத சந்தா | ,, ,, | ரூ. 3 | 8 0 |

தமிழ் ஹரிஜன்,

தியாகராயநகர் :: சென்னை.

# தமிழ் ஹரிஜன்

ஜூலை 28 ஞாயிறு 1946

## சுதந்திர இந்தியா

கேள்வி :—தாங்கள் ஜூலை மாதம் 15-ந் தேதி ஹரிஜனில் 'உண்மையான அபாயம்' என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ள கட்டுரையில் காங்கிரஸ்காரர்களில் அநேகர் தாங்கள் எந்த விதமான சுதந்திரம் விரும்புகிறார்கள் என்பதைக் கூட அறியாமலிருப்பதாகக் கூறினீர்கள். தாங்கள் தயவு செய்து தாங்கள் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியா எவ்விதமாக இருக்கும் என்பதைத் தெளிவாகக் கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பதில் :—நான் சுதந்திர இந்தியா எந்த விதமாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன் என்பதைப் பற்றி நான் அடிக்கடி எழுதி யிருப்பதாகவே எண்ணுகிறேன். ஆயினும் இந்த நண்பர் பல கேள்விகளுடன் இதையும் கேட்டிருப்பதால் கூறியது கூறல் என்னும் குற்றத்துக்கு ஆளாக நேர்ந்த போதிலும் பதில் உரைப்பதே நல்லது என்று எண்ணுகிறேன்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் என்றால் இந்தியா முழுவதிற்கும் சுதந்திரமாகும். இந்தியா என்பதில் சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் சர்க்காருடைய தயவின் பேரில் ஆட்சி நடத்தி வரும் பிரஞ்சு போர்த்துகீய இந்தியாவும் அடங்கும். சுதந்திரம் என்பது ஜனங்களுடைய சுதந்திரம் என்று பொருள் படுமே யன்றி ஜனங்களை ஆண்டு வருவோருடைய சுதந்திரம் என்று பொருள் படாது. ஆள்வோர் தங்கள் காலில் கிடந்து கசங்கும் மக்களுடைய விருப்பத்தை அனுசரித்தே நடக்க வேண்டும். அவர்களுடைய இஷ்டப்படி நடக்கத் தயாராயுள்ள பொது ஜன ஊழியர்களாக இருத்தல் வேண்டும்.

சுதந்திரம் என்பது கிராமங்களி லிருந்தே ஆரம்பிக்க வேண்டும். கிராமங்கள் ஒவ்வொன்றும் சகல அதிகாரங்களுடைய பஞ்சாயத்தாகிய குடியரசாக இருத்தல் வேண்டும். ஆதலால் ஒவ்வொரு கிராமமும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது உட்பட சகல விஷயங்களையும் தானே நிர்வகித்துக் கொள்வதாகவும் தனக்கு வேண்டிய அனைத்தையும் தானே உற்பத்தி செய்து கொள்வதாகவும் இருக்க வேண்டும். யார் எதிர்த்து வந்தாலும் எதிர்த்து நிற்பதற்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதைக் கொண்டு அக்கம் பக்கத்தாருடைய உதவியே வேண்டியதில்லை என்று எண்ண வேண்டாம். கிராமங்கள் பரஸ்பரம் உதவி செய்யக் கூடியனவாகவே இருக்க வேண்டும். ஆனால் அப்படி இருக்கும்படியாக யாரும் கட்டாயப் படுத்த மாட்டார்கள். அவர்களாகவே அவ்விதம் நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய சமூகம் அதிகமான நாகரிக முடையதாக இருக்கும். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியது யாது என்பதை அறிவார். அத்துடன் யாரும் பிறர்க்குக் கிடைக்கக் கூடாததை விரும்ப மாட்டார்கள்.

இத்தகைய சமூகத்துக்கு அஸ்திவாரம் உண்மையும் அஹிம்சையுமே யாகும். பிறரால் சிருஷ்டிக்கப் படாமல் தானே உளதாயும் சர்வமும் அறிந்ததாயுமுள்ள ஜீவ சக்தி ஒன்று மனிதன் அறிந்த சகல சக்திகளிலும் வியாபகமா யிருக்கின்றது. இந்தச் சக்திகள் எல்லாம் அழிந்து போனாலும் அது அழியாமல் நிற்கும். அதுவே கடவுள். அத்தகைய கடவுளை மனப்பூர்வமாக நம்புகிறவரே உண்மையாகவும் அஹிம்சையாகவும் நடக்க முடியும். இந்த விதமாகச் சகல வஸ்துக்களையும் தழுவி நிற்கும் ஜீவ ஒளியிடம் நம்பிக்கை இல்லையானால் நான் செய்யும் காரியங்களுக்கு எவ்வித நியாயமும் கூற முடியாது.

எண்ணிறந்த கிராமங்களை இந்த விதமாக அமைக்கும் அமைப்பில் மேல் கீழ் என்பதே கிடையாது. அது மேலே மேலே உயர்ந்து போகும் கோபுரம் போன்றதன்று. வட்டம் வட்டமாக அலைபிடும் பெரிய சமுத்திரம் போன்றதாகும். தனி மனிதர்கள் கிராமத்துக்காகத் தியாகம் செய்வார்கள். கிராமம் கிராமத் தொகுதிக்காகத் தியாகம் செய்யும். இந்த விதமாக எல்லோரும் பிறர்க்குத் தீங்கு செய்யாமலும் ஆணவம் கொள்ளாமலும் பணிவுடனும் ஒன்று சேர்ந்து ஏகமாக வாழ்வார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் சேர்ந்துள்ள சாகரத்தின் மகிமையை அனுபவிப்பார்கள்.

ஆதலால் வட்டத்தின் புறப்பாகங்கள் உட்பாகத்தை நசுக்கா. அதற்கு பலமே உண்டாக்கும், தனக்கும் உட்பாகத்தினின்றே பலத்தைப் பெற்றுக் கொள்ளும். இதெல்லாம் வெறும் கனவென்றும் அதனால் சிறிதும் சிந்திக்கத்தக்க தல்ல வென்றும் கேலி செய்யக் கூடும். க்ஷேத்திர கணிதத்தில் புள்ளி என்று கூறப்படுவதை யாராலும் எழுதிக் காட்ட முடியாது. ஆனாலும் அதன் உண்மையை யாரும் மறுக்க மாட்டார்கள். அதுபோல் என்னுடைய கனவும் மனித ஜாதிக்கு உபயோகமானதே யாகும். இந்தியாவானது இந்த உண்மையான லக்ஷியத்தைப் பரிபூரணமாக அடைய முடியாவிட்டாலும் இதற்காக வாழ வேண்டும் என்றே எண்ணுகின்றேன். நம்முடைய லக்ஷியத்தைச் சரியாக அறிந்து கொண்டால்தான் அதை அணுக முடியும். இந்தியாவில் ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக என்றேனும் அமைய வேண்டுமானால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசத்துக்கு இடமில்லாத என்னுடைய லக்ஷியத்தை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

நான் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியாவில் எல்லா மதங்களும் சரிசமானமான அந்தஸ்து உடையதா யிருக்கும். நாமெல்லோரும் ஆணி வேர் ஆழ்ந்து போயிருக்கும் பிரமாண்டமானதோர் மரத்தின் இலைகளே யாவோம். எவ்வளவு பெரிய புயல் காற்றும் அதை அசைக்க முடியாது.

என்னுடைய சுதந்திர இந்தியாவில் மனிதனை வேலை செய்யாமல் செய்வதும் அதிகாரங்களைச் சிலரிடமே இருக்கும்படிச் செய்வதுமான மெஷின்களுக்கு இடங் கிடையாது. மனிதப் பண்பு வாய்ந்த சமூகத்தில் தொழிலாளர்கள் விசேஷ ஸ்தானம் பெற்றவர்களாயிருப்பார்கள். சகல மக்களுக்கும் உபயோகமான மெஷின்கள் எல்லாவற்றிற்கும் இடமுண்டு. அத்தகைய மெஷின்கள் எவை என்பதைப் பற்றி நான் இன்னும் சிந்தித்துப் பார்க்க வில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். நான் சிங்கர் என்பவர் கண்டு பிடித்த தையல் மெஷினை உதாரணமாகக் கூற எண்ணினேன். ஆனால் அதுவுங்கூடச் சரியான உதாரண மன்று. இந்தச் சந்தர்ப்பத்தில் உதாரணங்கள் கூற வேண்டிய அவசியமு மில்லை,

கேள்வி :—இப்பொழுது அமைக்கப் போகும் அரசியல் நிர்மாண சபையைத் தாங்கள் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியாவை அமைப்பதற்கு உபயோகப் படுத்த முடியும் என்று நம்புகிறீர்களா?

பதில் :—அரசியல் நிர்மாண சபையைக் கொண்டு அந்தக் காரியத்தைச் சாதிக்கலாம். ஆனாலும் அது நடக்குமோ என்னமோ? அப்படி நான் சந்தேகிப்

பதற்குக் காரணம் பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியாரின் திட்டத்தில் அதற்கு வேண்டிய வசதிகள் இல்லை என்பதன்று. தூது கோஷ்டியாரின் திட்டம் யாரையும் நிர்ப்பந்திக்காததாயிருப்பதால் காரியம் நிறைவேறுவதற்குப் பல கட்சிகள் ஒன்று சேர்ந்து வேலை செய்யவேண்டியதாக இருப்பதே யாகும். இந்தக் கட்சிகள் எல்லாவற்றிற்கும் ஒரே விதமான லக்ஷியம் இல்லை. சுதந்திரம் வந்தால் எப்படி எப்படி நடக்கும் என்பதைப்பற்றி காங்கிரஸ் கட்சியில் கூட ஏகோபித்த அபிப்பிராயமிருப்பதாகத் தெரியவில்லை. எத்தனை பேர் அஹிம்சையையோ கைராட்டினத்தையோ கிராமத்தை அடிப்படையாக வைத்து அரசியலை அமைக்க வேண்டும் என்ற விஷயத்தையோ பரிபூரணமாக நம்பி இருக்கிறார்கள் என்பதை அறியேன். அதற்கு மாறாக இந்தியாவானது உலகத்தில் ராணுவ சக்தியுடன் காணப்படும் தேசங்களில் முதல் தரமானதாக இருக்கவேண்டும் என்றும், கிராமத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அரசியலை அமைக்க வேண்டும் என்றும் அநேகர் விரும்புவதையே அறிவேன். இந்தமாதிரியான குழப்பங்களுக்கிடையில் இந்தியாவானது தூய்மையாக எண்ணித் தூய்மையாகக் காரியம் செய்வதில் தலைமை வகிக்க வேண்டுமானால் கடவுள் இந்தப் பெரிய மனிதர்களை முட்டாள்களாக்கித், தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்கு வேண்டிய சக்தியை கிராமங்களுக்கு அளிப்பார்.

கேள்வி :—அரசியல் நிர்ணய சபையானது மேலே குறிப்பிட்ட கட்டுரையில் தாங்கள் கூறியிருப்பது போல அகத்தேயுண்டாகும் அபாயத்தின் காரணமாகப் பயன்படாமல் போகுமானால் தேசமுழுவதும் பொதுவேலை நிறுத்தம் செய்து அஹிம்சா முறையிலோ அல்லது அவசியமான அளவு ஆயுதத்தை உபயோகித்தோ அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று தாங்கள் காங்கிரசுக்கு யோசனை கூறுவீர்களா? இந்த யோசனை பிடிக்காவிட்டால் வேறு எந்த யோசனை கூறுவீர்கள்?

பதில் :—இருள் வருவதற்கு முன்னதாகவே நான் இருளைப் பற்றிச் சிந்திக்க மாட்டேன். அஹிம்சையோ அஹிம்சை யில்லையோ நான் எந்தக் காலத்திலும் பொது வேலை நிறுத்தம் செய்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உடந்தையாக யிருக்க மாட்டேன். அரசியல் நிர்ணய சபை முறிந்து போனால் நான் செய்யவேண்டியது யாது என்பதை இப்பொழுது அறியாத போதிலும் அந்தமாதிரி சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது எனக்குப் புலனாய் விடும் என்பதை அறிவேன். கடவுளென்னும் ஜீவ சக்தியையே நான் நம்பியிருப்பதால் சந்தர்ப்பம் வரும்பொழுது எனக்கு நிச்சயம் வழி காட்டுவார். ஒரு நிமிஷம்கூட முந்திக் காட்டமாட்டார்.

பாஞ்சகனி — 21-7.46 — மோ. க. காந்தி

## புகழை யிழந்துவிட்டது

ஆமதாபாத் சர்தார் வல்லபாய் படேலின் செல்வ நகரம். அந்த நகரத்தின் நகர சபைக்கு உன்னதமான சேவை செய்திருக்கிறார். அது இப்பொழுது தன்னுடைய புகழை இழந்துவிட்டது. அங்கே இந்துக்களும் முஸ்லீம்களும் எப்பொழுதும் சண்டை சச்சரவின்றி சமாதானமாகவே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது சிலகாலமாக அவர்களுக்குப் பயித்தியம் உண்டாயிருப்பது போல் தோன்றுகிறது. அது காந்தியடிகளுக்குச் சொல்ல முடியாத துக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது. ஆமதாபாத்திலுள்ள ஹிந்துக்களும் முஸ்லீம்களும் மனிதத் தன்மையை இழந்து விட்டதாகத் தோன்றுகிறது என்று அவர் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் கூறினார். ஆமதாபாத்தி லேற்பட்ட மரணங்களெல்லாம் கத்திக் குத்துப் போன்றவைகளால் ஏற்பட்டவையல்ல. ஜனங்கள் ஒருவர் கழுத்தை ஒருவர் அறுக்காமலிருப்பதற்காகப் போலீசின் உதவியையும் ராணுவத்தின் உதவியையும் நாடியது வெட்கப்படவேண்டிய விஷயமாகும். இரண்டு கட்சிகளில் ஏதேனும் ஒன்று சும்மா யிருந்துவிட்டால் இந்தமாதிரிக் கலகங்கள் நடைபெறமாட்டா. நாற்பது கோடி மக்களில் சில லக்ஷம் ஜனங்கள் நல்ல முறையில் கொல்லப்பட்டால் என்ன கெட்டுப் போகும்? பிறரைக் கொல்லாமல் தாம் சாகும் வித்தையைக் கற்றுக் கொண்டால், கடமையை நிறைவேற்றும் கர்மபூமி என்று புராணத்திலும் சரித்திரத்திலும் புகழப்பட்டுள்ள இந்தியா தேசம் பூலோக சொர்க்கமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. உள்நாட்டு மந்திரி திரு. முரார்ஜி தேசாய் ஆமதாபாத்துக்குப் போகுமுன் காந்தியடிகளைப் பார்க்க வந்திருந்தார். அவர் போலீசையும் ராணுவத்தையும் நம்பாமல் கடவுளைமட்டுமே நம்பி அந்த நகரத்தில் நடக்கும் அக்கிரமத்தீயை அணைப்பதற்காகச் செல்ல வேண்டுமென்று காந்தியடிகள் அவரிடம் சொன்னார். தீயை அணைக்கும் முயற்சியில் உயிர் துறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவர் காலஞ்சென்ற திரு. கணேஷ் ஷங்கர் வித்யார்த்தி உயிர் துறந்தது போல உயிர் துறக்க வேண்டும் என்றும் அவரிடம் கூறினார்.

திரு. முரார்ஜி ஆமதாபாத்தில் ஹிந்துக்கள் முஸ்லீம்கள் ஏனையோர் ஆகியவர்களின் பிரதிநிதிகளை வரவழைத்து ஒரு கூட்டு மஹாநாடு கூட்டி, அவர்கள் விரும்பினால் போலீசையும் ராணுவத்தையும் போய் விடும்படிச் சொல்லத் தயாராயிருப்பதாக அவரிடம் சொன்னார். ஆனால் பிரதிநிதிகள் அப்படி அபாயத்தை ஏற்கத் தாங்கள் தயாராக இல்லை என்று ஏகமனதாகப் பதில் கூறினார்கள். ஆதலால் போலீசும் ராணுவமும் அங்கே தங்கி வந்தன.

அதைக் கேட்டுக் காந்தியடிகள் பொறுக்க முடியாத மனவேதனையுடன் கூறியதாவது :—

“போலீசையும் ராணுவத்தையும் கொண்டு அட்டூழியங்கள் அடக்கப்பட்டுவிட்டன என்பது உண்மைதான். ஆனால் இன்று ஆமதாபாத்தில் காணப்படும் அமைதி செத்த பிணங்களின் அமைதியே ஆகும். அது யாரும் பெருமைப் படக்கூடிய விஷயமன்று. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து போலீஸின் உதவியும் இராணுவத்தின் உதவியும் இல்லாமலே அமைதியாக வாழ முடியுமானால் எவ்வளவு நல்லதாக யிருக்கும். அமைதியை நிலைநாட்டுவதற்காகப் போலீஸ் உதவியையும் ராணுவ உதவியையும் நம்பி யிருக்கும் வரை சுதந்திரம் என்று கூறுவதெல்லாம் அர்த்தமற்ற வெறும் பேச்சேயாகும்.

புனா, 9—7—46. பியாரேலால்

## உபயோகமான யோசனைகள்

டாக்டர் எம். எ. சாத்ரே, கீழ்கண்ட யோசனைகளை அனுப்பியிருக்கிறார் :—

தானியத்தை முதலில் மாவாக அரைத்து அந்த மாவைக் கொண்டு சப்பாத்தியோ ரொட்டியோ செய்வதற்காக இப்பொழுது உள்ள முறை தானியத்தை வீணாக்குவதாக யிருக்கிறது. இந்த முறையில் காணப்படும் குறைகள் வருமாறு :—

மில்களில் மிகுந்த வேகத்தில் அரைப்பதால் தானியத்திலுள்ள ஊன்சத்து மாச்சத்து உலோகச்சத்து

முதலியவை மாற்றமடைகின்றன. கொழுப்புச்சத்து முழுவதும் நஷ்டமாய் விடுகிறது. மாவும் உஷ்ணமாய் விடுகிறது. இந்தமாதிரியான மாவைத் தண்ணீர் விட்டுப் பிசையும்பொழுது அது பாதித்தண்ணீரைத்தான் ஏற்றுக்கொள்கிறது. அதனால் அதிலுள்ள மாச்சத்து நன்றாக விரிவதில்லை.

போதுமான ஜல மில்லாததால் பூரணமாகப் போஷணை தருவதில்லை. கீழ் நாடுகளில் தண்ணீர் விட்டுப் பிசைந்த மாவைச் சப்பாத்தியாகவோ பூரியாகவோ தட்டி எண்ணெயிலோ நெய்யிலோ வேக வைத்து எடுக்கிறார்கள். அப்படிச் செய்வதால் இரண்டு பக்கமும் மட்டும் வேகின்றது.

மேல்நாடுகளில் மாவை ஈஸ்ட் என்னும் பொருளோடு சேர்த்துப் பஞ்சு போலுள்ள ரொட்டி செய்கிறார்கள். இதுவும் பூரணமான போஷணையைத் தருவதில்லை. ஈஸ்ட் என்னும் பொருள் மாவைப் புளிக்கச் செய்து பொங்க வைப்பதால் மாவிலுள்ள ஜீவ சத்துக்களும் பிற சத்துக்களும் அழிந்து போகின்றன. ஆதலால் பண்டைக்கால முதல் கையாளப்பட்டு வரும் இந்த முறையை அனுசரித்துச் செய்யும் உணவு சுவையாகவோ சுகாதாரமாகவோ பூரணமாகப் போஷணை தருவதாகவோ எளிதில் ஜீரணமாவதாகவோ யிருப்பதில்லை. அரை குறையாக ஜீரணிப்பதற்குக் கூட ஜீரண நீர்கள் அதிகமான அளவு தேவைப்படுகின்றன. இந்த உணவை நோயாளிக்குக் கொடுக்கக் கூடாது என்பதிலிருந்தே இந்த விஷயத்தை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள் என்பது தெரிய வரும். இதைவிட நல்லதென்று பிஸ்கட்டுகளையும் சொல்ல முடியாது. அவைகள் எளிதில் ஜீரணமாகாததால் சகல நோய்களுக்கும் மூல காரணமான மலச்சிக்கல் நோயை உண்டாக்கி விடுகின்றன. அத்துடன் ரொட்டி செய்வதற்காக மாவைப் பிசைவதற்கு முன்னால் தவிட்டை நீக்குவதற்காகச் சல்லடையில் போட்டுச் சலித்து விடுகிறார்கள். இப்படித் தவிடும் நஷ்டமாய் விடுகிறது. கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் மாவைச் சுலபமாகக் கெடுக்கக் கூடியவைகளாகயிருக்கின்றன. அதனால் மாவை அதிகக் காலத்துக்கு வைத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. மாவை உபயோகிப்பதிலும் பிற ஊர்களுக்கு அனுப்புவதிலும் அதிகமான நஷ்ட முண்டாய் விடுகிறது. இந்தக் காரணங்களால் மாவை உபயோகிப்பது பொருள் நஷ்டமான காரியமாகவே யிருக்கிறது.

இப்பொழுது கோதுமை, சோளம், கேழ்வரகு போன்ற தான்யங்களின் போஷணையை அதிகரிப்பதற்காக அநேகவிதமான சோதனைகள் செய்து ஒரு புது முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதில் மேற்கூறிய குறைகள் எதுவும் கிடையா. அந்த முறையை அனுசரித்துச் செய்யும் உணவு அதிகமான ஆரோக்கியத்தைத் தருவதாக இருக்கின்றது.

இங்கு கூறும் புதுமுறை இது :—ஒரு படி கோதுமைக்கு மூன்றரைப்படி ஜலம் வீதம் சேர்த்து ஒரு பானையில் போட்டு மூடி அடுப்பில் வைத்து சிறுதீயாக எரித்து வேக வைக்க வேண்டும். தேவையானால் அடுப்பில் வைக்கு முன் சர்க்கரையோ வெல்லமோ ஒரு கரண்டி சேர்த்துக் கொள்ளலாம். முன் கூட்டி 12 முதல் 18 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து அதன்பின் வேக வைத்தால் விறகு மிச்சப்படும். ஆவியில் வேக வைப்பதானால் ஒரு படிக் கோதும்பைக்கு ஒன்றரைப்படி ஜலம் சேர்த்தால் போதும். சேர்க்க வேண்டிய ஜலத்தின் அளவு கோதுமையின் தினுசைப் பொறுத்தும் இருக்கும். இப்படி வேக வைக்கும்பொழுது பாதித் தண்ணீர் ஆவியாகப் போய் விடும். பாதித் தண்ணீரைக் கோதுமை உறிஞ்சிக் கொள்ளும். இந்த விதமாகக் கொஞ்சம் ஜலமுள்ள மட்டும் வேக வைக்க வேண்டும். ஆறும்பொழுது அந்த சொற்ப ஜலத்தையும் கோதுமை உறிஞ்சிக் கொள்ளும். தண்ணீர் இல்லாமல் போகுமட்டும் அடுப்பில் வைத்திருந்தால் கோதுமைக்குப் போதுமான ஜலம் கிடையாமல் போகும். அதிகமான ஜலம் உள்ளபொழுதே அடுப்பை விட்டு இறக்கி அந்த ஜலத்தை வெளியே இறுத்து விட்டால் கோதுமையிலுள்ள சத்துக்கள் தண்ணீரில் கரைந்துள்ளவை நஷ்டமாய்ப் போகும். கோதுமை விரிந்திருப்பதைக் கொண்டும் நசுக்கிப் பார்த்தும் நன்றாக வெந்து விட்டதை அறிந்து கொண்டு சுவைக்காகக் கொஞ்சம் உப்புச் சேர்த்துச் கொள்ளலாம்.

இந்த விதமாகச் சமைத்த கோதுமையை அப்படியே நன்றாக மென்று சாப்பிடவும் செய்யலாம். அல்லது அம்மியில் வைத்து அரைத்து மாவாக்கியும் உபயோகிக்கலாம். கோதுமையை ஆவியில் வெந்தால் நன்றாக வெந்ததும் அது தண்ணீர் விட்டுப் பிசைந்த மாவு மாதிரி இருக்கும். சாதாரணமாகச் செய்யும் முறைப்படி அதைக் கொண்டு பூரி, சப்பாத்தி, பிஸ்கட் முதலியன செய்து எண்ணெயிலோ, நெய்யிலோ வேக வைத்து உண்ணலாம்.

பம்பாய் முதலிய இடங்களில் தானியம் கிடையாது. மாவுதான் கிடைக்கும். ஆதலால் அங்குள்ளவர்கள் வழக்கம் போல் மாவைத் தண்ணீர் விட்டுப் பிசைந்து அதை ஒரு துணியில் வைத்துக் கட்டிக், கொதிக்கும் ஜலத்துக்கு மேலாகக் கட்டித் தொங்கவிட்டு வைக்க வேண்டும். மாவு நன்றாக ஆவியில் வெந்தவுடன் அதை எடுத்து வழக்கம் போல் சப்பாத்தி முதலியன செய்து உண்ண வேண்டும்.

இந்தப் புது முறையால் உண்டாகும் நன்மை யாதெனில், நாம் உபயோகிக்கும் கோதுமையில் 55 சதவிகிதம் வீணாகாமல் இருப்பதாகும். இதனால் ஒரு மாதத்தில் உபயோகமாகும் கோதுமை இரண்டு மாதங்களுக்கு வரக்கூடியதாக யிருக்கிறது. இந்த முறைப்படி வேக வைத்தால் ஒரு படிக் கோதுமை இரண்டரைப் படிக் கோதுமையாகிறது. அதனால் பழைய முறைப்படி நாலு சப்பாத்தி செய்யக் கூடிய மாவைக் கொண்டு இந்த முறைப்படிப் பத்துச் சப்பாத்திகள் செய்யலாம்.

இதுவும் தவிர இப்படித் தயாரிக்கும் உணவு அதிகச் சுவை உடையதாகவும், சுகந் தருவதாகவும், போஷணை யளிப்பதாகவும், சுலபமாக ஜீரணமாகக் கூடியதாகவும் இருக்கிறது.

அதற்குக் காரணம் உணவிலுள்ள எந்தவிதமான சத்தும் வீணாய்ப் போய் விடாமல் இருப்பதுதான். இந்த விதமாகச் செய்து சாப்பிட்டால் உடம்பில் நிறைகூடும். சுலபமாக ஜீரணமாவதால் நோயாளிகளுக்கும் கொடுக்கலாம். முழுத் தானியத்தை நெடு நாளைக்குக் கெட்டுப் போகாமல் வைத்திருக்கலாம். அத்துடன் மாவரைக்கும் மில்களும் தேவைப்படா.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த முறையை அனுஷ்டித்தால் எல்லோருக்கும் உணவு கிடைக்கும். இந்த விதமான உணவைத் தயாரித்தால் நம்முடைய நாட்டில் ஒவ்வொரு வருஷமும் டன்னுக்கு 360 ரூபாய் வீதம் 300 கோடி முதல் 450 கோடி வரை பெறக் கூடிய கோதுமை 80 லக்ஷம் டன் மிச்சப்படும். அதேயளவு சோளமும், கேழ்வரகும் மிச்சமாகும். இதனால் நாட்டில் ஏற்பட்டிருக்கிற பஞ்சம் குறையும். பட்டினி கிடக்கும் ஜனங்கள் பசி நீங்குவார்கள்.

## பனை வெல்லம்

திரு. கஜனன் நாய்க் பனை வெல்லம் செய்யும் தொழிலைப் பற்றி எழுதியுள்ள கடிதத்தின் சுருக்கம் இது :—

(1) பனை வெல்லம் செய்யும் தொழில் தேசத்தின் உணவைப் பெருக்கும். பனை வெல்லத்தை உற்பத்தி செய்தால் இப்பொழுது கரும்பு சாகுபடியாகிக் கொண்டிருக்கும் 40 லட்சம் ஏக்கர் செழிப்பான பூமி தான்யங்கள் உற்பத்தி செய்வதற்காக உபயோகமாகும்.

(2) பனை வெல்லத் தொழிலானது பரிபூரண மதுவிலக்குக்குத் துணை செய்யும். பனை மரங்கள் நியாயமான முறையில் பயன் படுத்தப்படும். அதனால் பனை ஏறுவோருடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும்.

(3) பனை வெல்லத் தொழில் பொது வுடமைத் திட்டத்துக்கான காரியமு மாகும். கரும்பு வெல்லத் தொழில் போல் இது சிலர்க்கு மட்டுமே நன்மை தருவதன்று. இது உண்மையாகவே ஒரு கிராமக் கைத் தொழிலாகும். இதைச் சரியானபடி அமைத்து விட்டால் கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு அநேக விதமான நன்மைகளைச் செய்து விடும்.

இது சம்பந்தமாக மாகாண சர்க்கார்கள் உடனடியாகச் செய்யக் கூடிய காரியங்கள் :—

(1) கலால் வரி விலக்கு

(அ) வெல்லம் தரும் பதநீர் இறக்கக் கூடிய பனை, தென்னை முதலிய மரங்களுக்கு வரி விதித்தலாகாது. பதநீர் கிடைத்தால் தான் பனை வெல்லம் செய்ய முடியும். கரும்பு வெல்லம் செய்வதற்குச் செய்துள்ள வசதிகள் எல்லாம் பனை வெல்லம் செய்வதற்கும் விற்பதற்கும் செய்து தர வேண்டும்.

(ஆ) கலால் உத்யோகஸ்தர் தொல்லையின்மை

திருட்டுத்தனமாய் கள் இறக்குவதைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கலால் உத்யோகஸ்தர்களும் போலீஸ் அதிகாரிகளும் பதநீர் இறக்குவோரைக் கஷ்டப்படுத்தலாகாது.

(2) பதநீர் கிடைக்கச் செய்தல்

(அ) பதநீர் இறக்கக்கூடிய மரத்தைச் சொந்தக்காரர் வெட்டினாலும் தண்டிக்கப் படவேண்டும்.

(ஆ) சர்க்காருக்குச் சொந்தமான மரங்களை வெல்லம் செய்வதற்காகச் சொற்பப் பணக் குத்தகைக்கு விடவேண்டும். மற்றவர்களும் அதிகமாகப் பணம் கேட்கக்கூடாது என்று ஏற்பாடு செய்யவேண்டும். சொந்தக்காரர் வெல்லம் செய்ய மரங்களை உபயோகியாவிட்டால் பிறர்க்குக் குத்தகைக்குக் கொடுக்கும்படி செய்யவேண்டும்.

(இ) வெல்லம் தரக்கூடிய மரங்கள் இப்பொழுதுள்ளவை எத்தனை என்று கணக்கெடுத்து இன்னும் எத்தனை புதிதாகப் பயிரிடப்பட வேண்டும் என்று நிர்ணயம் செய்யவேண்டும்.

(ஈ) தேச நிர்மாணத் திட்டத்தில் வெல்லம் தரும் மரங்களைப் விஞ்ஞான ரீதியாக பயிரிடும் விஷயமும் சேர்த்துக்கொள்ளப் படவேண்டும்.

(3) விஞ்ஞான உதவி

(அ) வெல்லம் செய்யும் தொழிலைக் கற்றுக்கொள்ள விரும்பும் கிராமவாசிகளுக்கு அத்தகைய பயிற்சியை அளிப்பதற்குப் போதுமான வசதிகள் செய்யப்படவேண்டும். இந்தக் கல்வியை தொழிற்பாடசாலைகளிலும் அளிக்கவேண்டும். அத்துடன் இது சம்பந்தமாகச் சிறு நூல்கள் எழுதி சுதேச பாஷைகளில் பிரசுரிக்கவும் வேண்டும்.

(ஆ) வெல்லம் செய்வதற்கு அவசியமான சகல சாதனங்களும் சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

(இ) வெல்லம் செய்வதற்காக விறகைச் சர்க்கார் காடுகளிலிருந்து இலவசமாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

(4) விற்பதற்கான வசதிகள்

(அ) மரவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து தாகரில்லாமல் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

(ஆ) போக்குவரத்து வசதிகள் செய்து தர வேண்டும்.

(இ) ஆஸ்பத்திரிகள், சிறைச் சாலைகள் போன்ற சர்க்கார் ஸ்தாபனங்கள் மர வெல்லத்தையே உபயோகிக்க வேண்டும்.

(5) உணவு உற்பத்தி சாதனங்கள்

பயிர் செய்யத் தகுதியில்லாததாகக் கிடக்கும் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை வெல்ல மரங்களைப் பயிர் செய்வதற்காக உபயோகிக்க வேண்டும். அவைகள் வளர்ந்து விட்டால் அப்புறம் கரும்பு வெல்லத்துக்குத் தேவைப்படாது. ஜனங்கள் பயிர் செய்யாத நிலங்களைப் பயிர் செய்யும்படி சர்க்கார் பணம் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

## கடவுள் ராஜ்யம்

“எந்த நாட்டில் துக்கமும் துயரமும் இல்லையோ,
எந்த நாட்டில் விருப்பும் வெறுப்பும் இதயத்தைக் கலக்குவதில்லையோ,
எந்த நாட்டில் ஆசையும் மயக்கமும் அலைப்பதில்லையோ,
எந்த நாட்டில் அன்பு நதி பாய்கின்றதோ,
எந்த நாட்டில் சகல ஜீவ சிருஷ்டிகளும் இடையறாத இன்பத்தை நுகர்கின்றனவோ,
எந்த நாட்டில் அறிவானது கடவுள் தரிசனத்தால் உண்டாகின்றதோ,
எந்த நாட்டில் இரவு, பகல், காலம், என்பன இல்லையோ,
எந்த நாட்டில் அனைவரும் தங்களுக்குத் தேவையானதை எல்லாம் பெறுகிறார்களோ,
எந்த நாட்டில் நியாயம் அரசாட்சி செய்கின்றதோ,
எந்த நாட்டில் தேவை இல்லாததால் இல்லாமை இல்லையோ,
எந்த நாட்டில் சுய நலம் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கின்றதோ,
எந்த நாட்டில் உயர்வு தாழ்வு ஆண்டான் அடிமை இல்லையோ,
எந்த நாட்டில் சதா காலமும் பகலாகவும் உஷ்ணமில்லாமலும் இருக்குமோ,
அந்த நாட்டுக்குப் பிரஜைகளே நாம்.

மனிதனே! இந்த நாடு உன் அகத்திலேயே உளது.
அது உனக்கே சொந்தம், அதன் அரசன் நீயே.
அது உன்னுடைய இதயத்தின் அந்தரங்கமான இடத்திலேயே அமைந்திருக்கின்றது.
அதை உண்மையாக விரும்புவோரே அடைவர்.”

இது ஒரு தேவாரத்தின் மொழிபெயர்ப்பாகும். இதைத் திருமதி. சுசீதா கிருபாளனி பாடக் கேட்டதும் காந்தியடிகள் மனமானது உருகிவிட்டது. அவர் அதை அச்சிட்டு தினந்தோறும் டில்லியில் நடந்த பிரார்த்தனைக் கூட்டங்களில் வினியோகிக்குமாறு செய்தார். “கடவுள் ராஜ்யம் உன் அகத்திலேயே உளது” என்று இயேசு கிறிஸ்து கூறிய திருவாக்கின் வியாக்கியானமே இந்தப் பாடல்.

புனா — 13-7-46 — ஏ. கே.

## ஒரு வைத்தியருடைய சான்று

தென் இந்தியாவிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் எலும்பு முறிவுப் பகுதியில் நோயாளியாக இருந்த ஒருவர் தம்முடனிருந்த நோயாளிகளிடம் நூல் நூற்றலையும் ஒரு சிகிச்சை முறையாக ஏற்படுத்திய விஷயத்தை நான் சில நாட்களுக்கு முன் எழுதி யிருந்தேன். இப்போது வங்காளத்தில் சர்க்கார் சர்ஜனாக இருந்து பென்ஷன் வாங்கியுள்ள டாக்டர் நரேந்திரநாத் கோஷ் கூறும் அனுபவங்கள் அதைவிட அதிகச் சுவையுடையனவாக இருக்கின்றன.

அவர் எழுதுவதாவது:—

"சர்க்கார் சர்ஜனா யிருந்தபடியால் எனக்கு வங்காளத்திலுள்ள சிறைகளில் வேலை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. நான் காமில்லாவிலுள்ள சிறைச்சாலையில் பைத்தியத்தைக் குணப்படுத்தும் சிகிச்சை முறையாக நூல் நூற்றலை ஏற்படுத்தினேன். இந்த விஷயத்தில் தினந்தோறும் ஒழுங்காக நூற்று வந்த ஒரு பெண்மணி எனக்கு உதவி செய்தார். அவர் சிறைச்சாலையை அடிக்கடி போய்ப் பார்த்து குறைகளைக் கூறும்படியாகச் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர். அவர் அமெரிக்கப் பெண். நல்ல கல்வி கற்றவர். இந்தியரை மணந்தவர். அவருடைய அனுமதி யில்லாததால் அவருடைய பெயரை எழுதுவதற்கில்லை. நாங்கள் மூன்று மாதங்களுக்குள் முதல் நோயாளியைக் குணப்படுத்தும் அதிர்ஷ்டம் பெற்றோம்.

அதன்பின் மிட்னாப்பூரிலுள்ள சிறைச்சாலையில் இந்தச் சிகிச்சை முறையைப் பைத்தியக்காரரிடையே உபயோகிக்க அதிகமான சந்தர்ப்பங்கள் பெற்றேன். இந்தச் சிறைச்சாலையில் 1942-ம் வருஷத்தில் சுமார் 40 பைத்திய நோயாளிகள் இருந்தார்கள். நோய் சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குக் கொஞ்சமாகவுமிருந்தது. நோயின் தன்மையும் பலவிதமாகக் காணப்பட்டது ஆட்டபாட்ட மில்லாமல் அமைதியாக இருந்தவர்கள் சொன்னவுடனேயே கைராட்டினத்தில் நூற்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் நூற்ற நூல் சிறந்ததாக ஆக ஆக அவர்களுடைய நோயும் கொஞ்சம் கொஞ்சமாக குண மடைந்து வந்தது. ஆனால் ஆட்டபாட்டம் அதிகமாகயுள்ள பைத்தியக்காரரை நூல் நூற்கச் செய்வது கஷ்டமாகவும் காலதாமதமாவதாகவும் இருந்தது. ஆயினும் அவர்கள் நூற்க ஆரம்பித்ததும் அவர்கள் தான் அதிகச் சீக்கிரமாகக் குண மடையலானார்கள். அவர்களை நூற்கும்படி செய்வதற்குமுன் அமைதியான நோயாளிகளாகச் செய்ய வேண்டியிருந்தது. அதற்காக மருந்துகள் கொடுத்தோம். அமைதியான பின் முதலில் பருத்தியை அரைத்தல் அதன் பின் தக்ளியில் நூற்றல் இறுதியில் கைராட்டினத்தில் நூற்றல் என்று படிப்படியாகக் கற்றுக் கொடுக்கப் பட்டார்கள். அவர்களுக்குக் கொடுத்த கை ராட்டினங்களில் பெரும்பாலானவற்றை அங்கே கைராட்டினத்துடன் வந்திருந்த பாதுகாப்புக் கைதிகள் ஜாமீன் கைதிகளுடைய உதவியைக் கொண்டு சிறைச்சாலையிலேயே செய்யப்பட்டன. எங்களுக்கு வேண்டிய பருத்தியையும் மிட்னாப்பூரிலும் கிருஷ்ண நகரிலுமுள்ள சிறைச் சாலைத் தோட்டங்களிலேயே உண்டாக்கினோம். இது விஷயத்தில் எங்களுக்கு சர்க்கார் தாவர சாஸ்திர நிபுணரும் ஸ்தல விவசாய உத்யோகஸ்தரும் பருத்திப் பயிர் செய்வதற் கேற்ற இடங்களைத் தெரிந்தெடுத்தும் நல்ல விதைகளையும் எலும்பு உரத்தையும் கொடுத்தும் உதவி செய்தார்கள். பருத்தியைப் பயிர் செய்வது முதல் துணியை நெய்வது வரையுள்ள சகல முறைகளையும் கைதிகளுக்குக் கற்றுக் கொடுக்க விரும்பினேன். பைத்தியக்காரர்கள் நூற்ற நூலைக் கொண்டு கைத் தறியிலே நெய்து அவர்களுக்கு உடை தயாரித்தோம். அது அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதா யிருந்தது. அதனாலும் அவர்களுடைய நோய் குறைந்து வந்தது. ஆயினும் அவர்களைப் பருத்தி விளைவிப்பதிலும் துணி நெய்வதிலும் உடை தைப்பதிலும் ஈடுபடுத்த முடியவில்லை. இப்படி ஈடுபடுத்த வேண்டுமென்பதே என்னுடைய ஆசை. இந்தவிதமான காரியங்கள் பைத்திய ஆஸ்பத்திரிகளில் மட்டுமின்றி சகல சிறைச் சாலைகளிலுமே செய்யப்படுமானால் எனக்குப் பரம சந்தோஷமா யிருக்கும். வங்காளத்திலுள்ள சிறைகளிலுங்கூட பருத்தியைப் பயிர் செய்ய முடியும். சகல சிறைகளிலும் மன நோய் கொண்ட கைதிகளே அதிகமா யிருப்பதால் ஏன் எல்லாச் சிறைச் சாலைகளும் இந்த உபயோகமான தொழிலை எல்லா விதமான கைதிகளுக்கும் ஏற்படுத்தவும் அவர்கள் நூற்கும் நூலைக்கொண்டு நெய்யும் துணியைக் கைதிகளுக்கும் போலீசாருக்கும் உடை தயாரிக்க உபயோகிக்கவும் கூடாது என்பது எனக்குவிளங்கவில்லை. இந்தப்படிச் செய்தால் மனநோய் உள்ளவருக்கு நோயைக் குணப்படுத்தும். மற்றக் கைதிகளுடைய ஒழுக்கம் உயரும். சர்க்கார் பணச் செலவு குறையும்."

இந்த டாக்டர் கூறும் விஷயத்தை எல்லா மந்திரி சபைகளுக்கும் சிபார்சு செய்ய விரும்புகின்றேன். அது வெற்றிகரமாக நடக்கவேண்டுமானால் அதை நடத்துவதற்குத் தக்கவர்கள் தேவையாகும். அவர்கள் கதர் விஞ்ஞானத்தைக் கசடறக் கற்றறிந்தவர்களாக இருப்பதோடு சேவை செய்ய வேண்டுமென்ற ஆவலுடையவர்களாகவும்இருக்க வேண்டும். சிறைச் சாலைகளில் எந்தக் காரியத்தையும் தண்டனை முறையாகவே ஏற்படுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் அந்த வழக்கம் உள்ள வரையில் நூல் நூற்றல் சிகிச்சை முறை வெற்றிகரமாக நடைபெற மாட்டாது. அத்துடன் நூல் நூற்றல் கையினாலும் சப்த மில்லாமலுமே தான் நடைபெற வேண்டும் என்பதை மறந்து விடலாகாது. அதன் இசை மனத்துக்குச் சாந்தி யளிக்கும். அதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பம்பாய், — 8-7-46 — பியாரேலால்

## காந்தி பக்தர்களுக்கு ஒரு வேண்டுகோள்

மகாத்மா காந்தியடிகள் தமிழர்களுக்கு வாரந்தோறும் தமிழ் ஹரிஜன் மூலம் உபதேசம் செய்து வருகிறார். அந்த உபதேசம் தமிழ் நாட்டிலுள்ள சகல கிராமங்களுக்கும் எட்ட வேண்டும் என்பது நமது எண்ணம். ஒவ்வொரு கிராமத்துக்கும் நல்ல குடி தண்ணீர் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் தமிழ் ஹரிஜன் என்று கூறினால் மிகையாகாது. ஆயினும் அது இன்னும் பல கிராமங்களுக்குச் செல்லாமல் இருப்பதால் காந்தி பக்தர்களும் காங்கிரஸ் நிர்வாகிகளும் எல்லாக் கிராமத்திலும் தமிழ் ஹரிஜன் வருகிறதா என்று பார்த்து வேண்டிய ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்கிறோம். ஏஜன்ஸி வேண்டுவோர் உடனே எழுத வேண்டுகிறோம்.

சின்ன அண்ணாமலை.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர்: ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர்: சின்ன அண்ணாமலை.